



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை, நேற்று (19.12.2023) புதுடெல்லியில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு விரைந்து நிதி ஒதுக்கீடு செய்யக் கோரியும் – தென் மாவட்டங்களில் தற்போது பெய்த அதி கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து எடுத்துரைத்து, அப்பாதிப்புகளைச் சீரமைத்திட தேவையான நிதியினை விரைந்து ஒதுக்கீடு செய்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு கோரிக்கை மனுவினை (Memorandum) அளித்தார்.

## நாடாளுமன்றத்தில் எம்.பி.க்கள் இடைநீக்கத்தைக் கண்டித்து - டிச 22 அன்று

# ‘இந்தியா’ கூட்டணி சார்பில் - நாடு தழுவிய போராட்டம்!

## புதுடெல்லியில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்! அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே அறிவிப்பு!

புதுடெல்லி,டிச.20-

**நாடாளுமன்றத்தில் எம்.பி.க்கள் இடைநீக்கத்தை கண்டித்து ‘இந்தியா’ கூட்டணி சார்பில் டிசம்பர் 22 அன்று நாடு தழுவிய அளவில் போராட்டம் நடத்தப்படும் என அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே தெரிவித்துள்ளார்.**

புதுடெல்லியில் இந்தியா கூட்டணியின் 4வது ஆலோசனைக் கூட்டம் நேற்று (டிச. 19) நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இந்தியா கூட்டணி சார்பில் 28 கட்சிகள் பங்கேற்றன. தமிழ்நாட்டி லிருந்து தி.மு.க. சார்பில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டார்.

சமீபத்தில் நடந்து முடிந்த 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலில், 4 மாநிலங்களில் காங்கிரஸ் தோல்வியைச் சந்தித்த பிறகு முதல்முறையாக நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தொகுதிப் பங்கீடு, பா.ஜ.க.வுக்கு எதிரான தேர்தல் வியூகம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது.



‘இண்டியா’ கூட்டணியில் 4–வது ஆலோசனைக் கூட்டம் புதுடெல்லியில், நேற்று மாலை நடைபெற்றது. இக்கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, திருமதி. சோனியா காந்தி, தமிழ்நாடு முதலமைச்சரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் மற்றும் ‘இண்டியா’ கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

சுமார் 3 மணிநேரம் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே பேசியதாவது:

“இந்தியா கூட்டணி கட்சிகளின் கூட்டம் சுமூகமாக நடந்தது. 3 மணிநேரம் நடைபெற்ற கூட்டத்தில் அனைத்து விஷயங்களையும் விவாதித்தோம்.

எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து இந்தியா கூட்டணி தலைவர்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். இந்திய வரலாற்றில் 151 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டது இதுவே முதல்முறை. இதற்கு எதிராக நாங்கள் போராடுவோம். இது மிகவும் தவறான அணுகுமுறை. இதற்கு எதிராக இந்தியா கூட்டணி கட்சிகள் ஒன்றிணைந்துள்ளன. எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து டிசம்பர் 22ஆம் தேதி நாடு தழுவிய அளவில் போராட்டம் நடத்தப்படும்.

கட்டட திறப்பு விழாவுக்குச் செல்லும் பிரதமர் நாடாளுமன்றம் வர மறுக்கிறார்.

நாடாளுமன்றத்தில் மர்ம நபர்கள் புகுந்து அத்துமீறலில் ஈடுபட்டது தொடர்பாக பிரதமர், உள்துறை அமைச்சர் ஆகியோரிடம் விளக்கம் கேட்பதில் என்ன தவறு உள்ளது?”

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

## வாக்குப் பதிவு ஒப்புகைச்சீட்டும் எண்ணப்பட வேண்டும்!

**‘இந்தியா’ கூட்டணிக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட மற்றுமோர் தீர்மானம் வருமாறு:**

**“வாக்குப் பதிவு எந்திரத்தின் நன்பகத்தன்மை குறித்த பல்வேறு வல்லுநர்களும் அரசியல் கட்சிகள் சந்தேகத்தை எழுப்பியுள்ளனர். இதுகுறித்து அதனுடைய நன்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கோரிக்கை மனுவுடன் இந்தியா கூட்டணி கட்சிகளின் பிரதிநிதிகள் இந்திய தேர்தல் ஆணையத்தைச் சந்தித்து கோரிக்கை மனு அளிக்கச் சென்றனர்.**

**ஆனாலும் தேர்தல் ஆணையம் இவர்களைச் சந்திக்க பெரும் தயக்கம் காட்சியது. இந்தியா கூட்டணியின் கோரிக்கை மிகச் சாதாரணமான ஒன்றுதான். மின்னணு இயந்திரத்தில் வாக்குப்பதிவு முடிந்தவுடன் வருகிற ஒப்புகைச் சீட்டு வாக்காளர்கள் கையில் வழங்கப்பட வேண்டும்.**

**அவர்கள் அதைச் சரிபார்த்த பிறகு, அது தனி வாக்குப் பெட்டியில் போடப்பட வேண்டும். அதனை 100 சதவீதம் எண்ணுவதை உறுதி செய்ய வேண்டும்.”**

## பிரதமரிடம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை மனு... முதல் பக்கத் தொடர்ச்சி

எடுத்துரைத்ததுடன், தமிழ்நாடு அரசு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொண்டதற்கு அக்குழு பாராட்டு தெரிவித்ததையும் குறிப்பிட்டு, சீரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக தற்காலிக நிவாரணத் தொகையாக 7033 கோடி ரூபாயும், நிரந்தர நிவாரணத் தொகையாக 12,659 கோடி ரூபாயும் கோரப்பட்டதைத் தெரிவித்து, அந்நிதியினை விரைந்து ஒதுக்கீடு செய்யுமாறு இந்தியப் பிரதமர் அவர்களிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மேலும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் கடந்த இரண்டு நாட்களாக (டிசம்பர் 17 மற்றும் 18) பெய்த கனமழை முதல் அதி கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து விளக்கி, அம்மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

**மிக்ஜாம் புயல் கனமழையால் சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் கடந்த 47 ஆண்டுகளாக இல்லாத கனமழையால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பையும், தென் மாவட்டங்களில் தற்போது வரலாறு காணாத வகையில் 100 ஆண்டுகள் இல்லாத கனமழை பெய்ததால் ஏற்பட்ட பாதிப்புகளையும் கருத்தில் கொண்டு, தேசியப் பேரிடராக அறிவிக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் அவர்களிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார். எனவே, பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 2000 கோடி ரூபாயை அவசர நிவாரண நிதியாக வாழ்வாதார உதவிக்காகவும், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களின் தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்காகவும் வழங்கிட வேண்டும் என்றும் இந்தியப் பிரதமர் அவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.**

இச்சந்திப்பின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு அவர்கள் உடனிருந்தார்.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், கீரைப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் முடிவுற்ற புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்கள் மற்றும் புதிய செவிலியர் குடியிருப்பு கட்டிடத்தினை திறந்து வைத்தும், புதிய துணை சுகாதார நிலைய கட்டடங்கள், ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் மற்றும் வட்டார பொது சுகாதார அலகு கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்தும், பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை நேற்று (19.12.2023) வழங்கினார்கள். இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கி.சாந்தி தலைமைவகித்தார். உடன் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வ்விநாயகம், மாவட்ட வருவாய் அலுவலர் பால்பிரின்ஸ்லி ராஜ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தடங்கம் பெ.சுப்பிரமணி, முன்னாள் அமைச்சர் முனைவர். பழனியப்பன், இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.ம.சாந்தி, துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.ஆர்.கே.ஜெயந்தி, அரூர் வட்டாட்சியர் வில்சன் ராஜசேகர், மாவட்ட மாற்றுதிறனாளிகள் நல அலுவலர் திருமதி.செண்பகவள்ளி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜி.சேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



பேறிஞர் அண்ணாவால் ”பேராசிரியர் தம்பி என்று அன்போடும், இனமானப் பேராசிரியர் என்று முத்தமிழறிஞர் கலைஞரால் பெருமிதத்தோடும் அழைத்துப் போற்றப்பட்ட, பேராசிரியர் அவர்களின் 102– வது பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க பேராசிரியர் மகன் பேராசிரியர் அ. அன்புச்செல்வன், கழக செய்தித் தொடர்பு அணித் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தி.மு.க. இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய செயலாளர்கள் பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ரங்கநாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், மயிலை த.வேலு உள்ளிட்டோர் நேற்று (19.12.2023) காலை நுங்கம்பாக்கம் டி.பி.ஐ.வளாகத்தில் உள்ள பேராசிரியர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கீழே அமைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தினார்கள்.